# ஜோன் பனியனும் மோட்சப் பயணமும்

ஜெரமி வோக்கர்

REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**ஜோன் பனியனும் மோட்சப் பயணமும்**

*ஜெரமி வோக்கர்*

*முதலாம் பதிப்பு: 2014*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைப்பேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org *வலைப்பூவைப் பார்க்கவும்.*

*குறிப்பு: இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துப் படங்களும் இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.*

# அறிமுகம்

ஜோன் பனியனைப் பற்றி அதிகம் அறியாதவர்கள் இருந்து விடலாம். அவரெழுதிய நூல்களில் தலைசிறந்தது 'மோட்ச பயணம்'. அநேக நூல்களை எழுதி வெளியிட்டுள்ள பனியன் அதிகம் படிக்காதவர். இருந்தபோதும் சுயமாகக் கற்க வேண்டியதனைத்தையும் கற்றிருந்தவர். வேதத்தில் அவருக்கு பெரும் பாண்டித்தியம் இருந்தது. அப்படி இல்லாமல் மோட்ச பயணம் போன்ற அருமையான கிறிஸ்தவ இலக்கியத்தை எழுதியிருக்க முடியாது. இன்றைக்கு 'மோட்ச பயணம்' தமிழில் இருக்கின்றது. ஆங்கிலத்தில் பலவிதமான பதிப்புகள் தொடர்ந்தும் இருந்து வருவதோடு பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகின்றன.

வாசகர்களுக்கு மோட்சப் பயணத்தின் அருமையை விளக்கி, அதை அவர்கள் வாசிக்கத் தூண்டும் வகையில் ஒரு ஆக்கத்தை எழுதித் தரும்படி நான் ஜெரமி வோக்கரைக் கேட்டேன். அதன் பலனே இந்தச் சிறு நூல். ஜோன் பனியனின் வாழ்க்கையை சுருக்கமாக விளக்கிவிட்டு, மோட்சப் பயணத்தின் உள்ளடக்கத்தைப் பற்றித் தெளிவாக விபரித்து, அதை வாசிப்பதனால் ஏற்படும் ஆத்மீக பலன்களை விளக்கியுள்ளார் ஜெரமி வோக்கர். இந்த ஆக்கம் திருமறைத்தீபத்தில் ஏற்கனவே வெளிவந்திருக்கிறது. இப்போது அதை 'சீர்திருத்த வெளியீடுகள்' இந்தியாவில் முதல் தடவையாக நூலாக வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றிகள்.

**ஆர். பாலா**

**ஆக்லாந்து, நியூசிலாந்து**



ஜோன் பனியன் (கி.பி. 1628 - 1688)

# ஜோன் பனியன்
# (John Bunyan)

“ஐயா இந்த விஷயத்தில் என்னுடைய முடிவு உறுதியானது. இன்று நான் சிறையில் இருந்து வெளிவந்தால் கர்த்தரின் துணையோடு நாளை மறுபடியும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பேன்” என்று தன்னை சிறையில் தள்ளிய வழக்குமன்ற நீதியரசர்களைப் பார்த்து ஜோன் பனியன் கூறிய வார்த்தைகள் இவை. தன்னுடைய உயிருக்கு ஆபத்து வரும் என்று தெரிந்திருந்தபோதும் பனியன் கர்த்தரின் பணியைக் கைவிட்டுவிடவில்லை. பன்னிரெண்டு வருடங்கள் சிறையில் தள்ளப்பட்டிருந்த காலங்களிலும் பனியனின் நாவு அவருடைய பேனாவின் மூலம் பேசியது. அவர் எழுதிய பல நூல்களில் குறிப்பிடத் தகுந்தது மோட்சப் பயணம் (Pilgrims Progress).

பனியன், நவம்பர் 28, 1628 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பெட்போர்ட்ஷயரில் (Bedfordshire) பிறந்தார். அவருடைய தந்தை இரும்புத் தொழில் செய்து வந்தார். குறுகிய காலத்துக்கு மட்டுமே ஆரம்பப் பள்ளிக்கு சென்ற பனியன் அங்கே வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டார். பின்பு தந்தையின் தொழிலை செய்ய ஆரம்பித்து தான் பள்ளியில் கற்றவைகளையும் அவர் மறக்க நேரிட்டது. சிறுவயதில் கர்த்தரின் நியாயத்தீர்ப்பு பலதடவைகள் கனவில் அவரைப் பயமுறுத்தியபோதும் சிறுவயதிலிருந்தே அவர் ஒழுக்கக்குறைவாக நடந்து கொண்டார். கர்த்தரின் பராமரிப்பின் மூலம் அவர் மரணத்தில் இருந்து ஒரு தடவை காப்பாற்றப்பட்டார்.



பெட்போர்ட்சயரில் பனியன் வாழ்ந்த வீடு

*1642ல் இங்கிலாந்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது. 1644ல் பனியனின் தாயும், சகோதரியும் மரணமடைந்தனர். அந்த வருடத்திலேயே, (பதினாறு வயதில்) பனியன் நாட்டரசனான முதலாம் சார்ள்சோடு போரிட்டுக் கொண்டிருந்த நாடாளுமன்றப் படையில் இணைந்தார். போர் காலத்திலும் கர்த்தர் அவரை மரணத்தில் இருந்து தப்பவைத்தார்.*

*1647ல் அவர் பணிபுரிந்த படை கலைக்கப்பட்டதால் மறுபடியும் தன்னுடைய ஊருக்குத் திரும்பினார் பனியன். அக்காலத்தில் அவர் திருமணம் செய்து கொண்டார். அவருடைய மாமனார் பக்திவிருத்தியுள்ள மனிதன். வறுமையில் இருந்தபோதும் பனியனின் மனைவி தன்னோடு இரு முக்கியமான நூல்களைக் கையோடு புகுந்த வீட்டுக்குக் கொண்டு வந்தாள். அந்த நூல்களை வாசித்ததாலும், மனைவியினுடைய பேச்சு, நடத்தை ஆகியவற்றாலும் பனியனின் மனச்சாட்சி அவரை உறுத்தத் தொடங்கியதால்*

வெளிப்பார்வைக்கு பக்திவிருத்தியுடன் நடந்துகொள்ள ஆரம்பித்தார். இருந்தபோதும் பாவத்தின் கோரத்தைக்குறித்து தான் கவலைப்படவில்லை என்று பனியன் கூறினார். மிகவிரைவில் இந்நிலை மாறி பனியன் தன் வாழ்வில் சில வருடங்களுக்கு பாவத்தின் பாவத்தன்மையை உணர்ந்து ஆழமாக வருந்தியதோடு அதிலிருந்து விடுபட்டு இரட்சிப்பை அடைய வேண்டுமென்பதை உணர்ந்தார். பெட்போர்டில் இருந்த ஒரு சுயாதீன சபைக்கு போக ஆரம்பித்த பனியன் அச்சபைப் போதகரான ஜோன் கிபோர்டின் (John Gifford) பிரசங்கங்களால் பயனடைய ஆரம்பித்தார். பல வருடங்களுக்கு அவருடைய மனச்சாட்சியை பாவத்தின் உணர்வு குடையத் தொடங்கியது. ஆத்மீகக் கேள்விகளும், சந்தேகங்களும், கர்த்தரின் தண்டனையைக் குறித்த பயமும் அவரை வாட்டி இரட்சிப்பிற்காக அலைந்த பனியன் தான் ஏற்கனவே தண்டனைக்கு ஆளாக்கப்பட்டு விட்டதாக எண்ணி மருண்டார்.

திடீரென ஒரு நாள், "கர்த்தரின் நீதி பரலோகத்தில் இருக்கிறது" என்ற வார்த்தைகள் அவருடைய கண்களைத்



பெட்போர்ட்சயரில் பனியன் ஆரம்பத்தில் சென்ற சபை